# அகப்புற வாழ்வே பண்டையத் தமிழர் பெருவாழ்வு – ஓர் ஆய்வு

**முனைவர் இரா.இராஜலெட்சுமி**
**உதவிப்பேராசிரியர், தத்துவம், சமயம் மற்றும் பண்பாட்டுத்துறை,**
**பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி), மேலையூர் - 609107.**
drmrrpcm@gmail.com

18

**ஆய்வுச்சுருக்கம்**

தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும், பண்பாடும் அமையும் என்பது பண்டைய தமிழரின் சிறந்ததொரு கொள்கையாகும். மொழிக்கு மட்டுமின்றி மக்களுடைய வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்ட பெருமை பழந்தமிழரைச் சாரும். வாழ்க்கைக்குத் தேவையான ஒழுங்கு முறைகளை வகுத்துக் கொடுத்த இலக்கணத்திற்குப் பொருள் இலக்கணம் என்று பெயர். சங்க இலக்கியமானது அகம் மற்றும் புறத்தை இணைத்துப் பொருள் எனக் கூறியது. அன்பை அடிப்படையாகக் கொண்டது அகம் என்றும், வீரத்தை அடிப்படையாகக் கொண்டது புறம் என்றும் கொண்டனர். காதலும், வீரமும் செறிந்ததே மனித வாழ்வு, அதுவே முழுமைப் பெற்ற வாழ்வு, உலகம் போற்றும் வாழ்வாகும்.

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே திணைகள் வழக்கில் இருந்து வந்துள்ளன. அவைகள் தொல்காப்பியரால் நிறுவப்பெற்றவை அல்ல. பழந்தமிழர்கள் வாழ்ந்த நிலத்தின் பாகுபாடுகளுக்கு திணைகள் என்று பெயர். தொல்காப்பியத்தின் பொருள் இலக்கணத்தில் விளக்கப்படும் ஐவகை திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன மக்கள் வாழ்க்கையைப் பற்றியவைகளாகும். ‘திணை’ என்ற சொல் நிலத்தை மட்டுமின்றி நிலத்தின் அமைப்பு, அங்கு வாழும் மக்களின் இயல்பு, அங்கு உயிர்வாழும் விலங்குகள், பறவைகள், செடி கொடிகள் வழிபட்டு வந்த தெய்வங்கள் அனைத்தையும் குறித்து நிற்கிறது. உலகில் வாழும் மக்களின் வாழ்க்கையை அகம் என்றும், புறம் என்றும் பாகுபடுத்தி அதை இயற்கையுடன இயைபுபடுத்தியது பண்டைய தமிழரின் சிறந்ததொரு பண்பாடாகும். தமிழரின் வாழ்வு, தமிழர் பேசிய மொழி, தமிழர் வாழ்ந்த நிலம் ஆகிய இம்மூன்றுக்கும் இயல்பான நெருங்கியத் தொடர்பு ஒன்று உண்டு என்ற உண்மை தமிழரின் நாகரிகத்தின் அடிப்படைத் தத்துவமாக அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்**

தமிழர், அகம், புறம், திணை, அகவாழ்வு, புறவாழ்வு

## 1. முன்னுரை

தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும், பண்பாடும் அமையும் என்பது பண்டைய தமிழரின் சிறந்ததொரு கொள்கையாகும். காலம் என்ற தத்துவமும் மக்களின் வாழ்க்கையில் பேரிடங் கொண்டது. ஆகவே மக்கள் வாழ்ந்த இடமும், காலமும் அவர்களுக்குத் தேவையான முதற்பொருளாகக் கருதப்பட்டது.[1] சங்க இலக்கியமானது அகம் மற்றும்

புறத்தை இணைத்துப் பொருள் எனக் கூறியது. வாழ்க்கை இலக்கியத்தைப் பண்டைய பைந்தமிழ் பெருமக்கள் பொருளிலக்கணம் என்ற பெயரில் அமைத்தனர். அன்பை அடிப்படையாகக் கொண்டது புறம் என்றும் கொண்டனர். காதலும், வீரமும் செறிந்ததே மனித வாழ்வு, அதுவே முழுமைப் பெற்ற வாழ்வு, உலகம் போற்றும் வாழ்வாகும். அதுவே, பண்டைத் தமிழரின் பெருமிதம் மிக்க வாழ்வாகும். ஆகவே, இக்கட்டுரையானது அகப்புற வாழ்வே பண்டையத் தமிழர் பெருவாழ்வு எனும் பொருண்மையை விளக்குவதாக அமைந்துள்ளது.

**2. அகவாழ்வு**

மொழிக்கு மட்டுமின்றி மக்களுடைய வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்ட பெருமை பழந்தமிழரைச் சாரும். வாழ்க்கைக்குத் தேவையான ஒழுங்குமுறைகளை வகுத்துக்கொடுத்த இலக்கணத்திற்குப் பொருள் இலக்கணம் என்று பெயர்.

முதலெனப் படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே - தொல்காப்பியர்

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே திணைகள் வழக்கில் இருந்து வந்துள்ளன. அவைகள் தொல்காப்பியரால் நிறுவப்பெற்றவை அல்ல. பழந்தமிழர்கள் வாழ்ந்த நிலத்தின் பாகுபாடுகளுக்கு 'திணைகள்' என்று பெயர். 'திணை' என்ற சொல்லுக்கு குடி என்றும் ஒரு பொருள் உண்டு. குடிகள் வாழும் நிலமும் திணை எனப்பட்டது. தொல்காப்பியத்தின், பொருள் இலக்கணத்தில் விளக்கப்படும் ஐவகை திணைகளும் மக்கள் வாழ்க்கையைப் பற்றியவையாகும்.

திணை என்ற சொல் நிலத்தை மட்டுமின்றி நிலத்தின் அமைப்பு, அங்கு வாழும் மக்களின் இயல்பு, அங்கு உயிர்வாழும் விலங்குகள், பறவைகள், செடி கொடிகள், மரங்கள், உழவுப் பயிர் வகைகள், மக்கள் வழிபட்டு வந்த தெய்வங்கள் ஆகியவற்றையும் குறித்து நிற்கிறது.

**3. அகத்திணைகள்**

ஐவகையான அன்பு, ஒழுக்க நிகழ்ச்சிகளுக்கு களனும், காலமும் வகுத்தனர். திணை என்பது ஒழுக்கம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை என்ற ஐந்திணைகளையும் அகப்பொருளாகக் கொண்டு அன்பின் ஐந்தினை என்று தொல்காப்பியர் சிறப்பிக்கிறார். தொல்காப்பியர் தாழ்ந்த இன்ப ஒழுக்கங்களாகக் கொண்ட கைக்கிளையையும், பெருந்திணையையும் பிறர் புறப்பொருளாகக் கருதுகிறார்.

நிலத்தைப் பாகுபாடு செய்ததைப் போலவே காலத்தையும் பாகுபாடு செய்தனர். காலம் பெரும்பொழுது, சிறுபொழுது என்று இருவகையாகப் பிரிக்கப்பட்டது. ஓராண்டின் தட்பவெப்ப மாறுபாடுகளைக் காட்டிய கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய காலங்கள் பெரும் பொழுதுகள், காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம், வைகறை ஆகியவை சிறு பொழுதுகள். பெரும்பொழுதை ஆண்டு, திங்கள், நாள், நாழிகை, நொடி எனவும் பகுத்திருந்தனர்.[2]

**3.1. குறிஞ்சித்திணை**

தலைவனும், தலைவியும் தனியே கூடி இன்பமடைவதாகும். இந்த நிகழ்ச்சிகள் மலை, மலை சார்ந்த இடங்களில் நிகழும். கூதிர் முன்பனிக் காலங்களாகிய ஐப்பசி, கார்த்திகை, மார்கழி

தைத்திங்கள்களில் நடு யாமத்தில் இவ்வொழுக்கம் நடைபெறும் என்று வரையறுத்துள்ளனர்.

### 3.2. முல்லைத்திணை

தலைவன் தொழில் தொடர்பாக வெளியிடம் சென்றபோது தலைவி பிரிவுத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு வீட்டில் தங்கி இருத்தலாகும். இச்செயல்கள் காட்டிலோ காடு சார்ந்த இடங்களிலோ நடைபெறும். கார்காலமாகிய ஆவணி, புரட்டாசி மாதங்களின் மாலைப் பொழுதில் இந்நிகழ்ச்சிகள் நிகழ்வுறும் என்று வரையறுத்துள்ளனர்.

### 3.3. மருதத்திணை

தலைவன் பரத்தையோடு உறவு கொண்டான் என்று தலைவி பிணங்கி ஊடுதல் மருதத் திணையாகும். வயல் வளம் செறிந்த மருத நிலத்தில் பன்னிரு திங்கள்களிலும் விடியற்பொழுதெல்லாம் இச்செயல்கள் நடைபெறும் என்று வரையறுத்துள்ளனர்.

### 3.4. நெய்தல் திணை

தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி பிரிவுத் துயரால் தவித்தல் நெய்தல் திணையாகும். கடலும் கடல் சார்ந்த இடங்களில் ஆண்டு முழுவதும் காலைப்பொழுதில் இந்நிகழ்ச்சி நடைபெறும்.

### 3.5. பாலைத்திணை

காதலர் பிரிதல் தொடர்பான நிகழ்ச்சிகள் பாலைத்திணை மாசி முதல் ஆடி வரை பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய பருவங்களில் நண்பகல் நேரத்தில் இந்நிகழ்ச்சிகள் நடைபெறும்.[4]

### 4. அகவாழ்வியல்

இதனைக் களவியல், கற்பியல் என இருவகையாக்கினர். தலைவனும், தலைவியும் மறைவாகக் காதல் புரிதல் களவியல். பெற்றோர் இருமனத்தையும் இணைத்துத் திருமணம் புரிதல் கற்பியல். இத்தகைய அருள்வாழ்க்கையை அறிவியலுக்கும், உலகியலுக்கும் ஏற்ப அமைத்துள்ளனர்.

### 5. புறவாழ்வு

வீரத்தைக் கருவாகக் கொண்ட பொது வாழ்வே புறவாழ்வாகும். அப்புற வாழ்வை எல்லோரும் அனுபவித்து தம் அனுபவத்தை எடுத்துக் கூறுவது அறம், பொருள் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கம்.

### 6. புறத்திணைகள்

பழங்காலத்தில் மக்கள் உரிமையுடன் வாழ உறுதியான அரசியல் நடத்த அடிக்கடி போர் ஏற்பட்டது. ஆதலால் புறவாழ்க்கையின் பகுதி போர் ஒழுக்கங்களாகவே அமைந்தன. தமிழரின் போர் வாழ்க்கை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை எனத் திணைகள் வகைப்படுத்தப்பட்டன.

போர் துவங்கும் முன் வீரர் வெட்சிப் பூவைச் சூடிச்சென்று பிற நாட்டுப் பசுக்களைக் கவர்தல் வெட்சி, பகைவர் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்க வேண்டி வீரர் கரந்தைப் பூச்சூடிப்போர் செய்தல் கரந்தை. பகைவர் நாட்டைக் கொள்ளக் கருதிப் படை திரட்டிப் போர்க்கெழல் வஞ்சி. போர் குறித்து வருவோரை எதிர்த்துக் காஞ்சிப் பூச்சூடிச் செல்லல் காஞ்சி.[5]

பகைவர் வந்து கோட்டையைச் சுற்றி வளைத்து முற்றுகை இடுகையில், கோட்டைக்குள் இருப்போர் நொச்சிப் பூச்சூடிக் கோட்டையைக் காத்தல் நொச்சி. பகைவர் கோட்டையை கொள்ளக்

கருதி உழிஞைப் பூச்சூடிச் செல்லல் உழிஞை. போர் துவங்கிக் களங்குறித்துத் தும்பைப் பூச்சூடி எதிர் எதிர் நின்று போரிடுதல் தும்பை.[6] போரில் வென்றவர் வாகைப் பூச்சூடி வெற்றி முழங்கத் திரும்புதல் வாகையாகும்.

### 6.1. பாடாண் திணை

போரில் வென்ற தலைவனின் சிறப்பைப் பேசுவது. தலைவனின் புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற சிறப்புக்களைக் கூறுவது.

### 6.2. பொதுவியல் திணை

போர்த் திணைகளிலோ, பாடாண் திணையிலோ கூறப்படாத செய்திகளைக் கூறுவது.

### 7. அகப்புறத் திணைகள்

தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணை இவற்றை அகத்திணைகளாகக் கொண்டு இலக்கணம் கண்டார். தலைவன், தலைவி இவர்தம்முன் ஒருவர் விரும்ப மற்றவர் விரும்பாதிருப்பின் அது கைக்கிளை. பொருத்தமில்லாக் காதல், மிகுந்த காமம் இவை பெருந்திணை. இவை தாழ்ந்த இன்ப நிலை ஒழுக்கங்களாகக் கருதி அகத்திணை இயலில் சேர்த்தார். பிற்காலத்தில் கைக்கிளையையும், பெருந்திணையையும் புறப்பொருளில் சேர்த்தனர். இதனால் தமிழர்தம் அகவாழ்வின் உயர்வு தெளிவாக வெளிப்படுகிறது.

### 8. முடிவுரை

பழந்தமிழகத்தில் மக்கள் இல்லற வாழ்க்கையையே பெரிதும் பாராட்டி வந்தனர். ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்வாங்கு வாழ்வாராயின் அவர்களுக்கு வீடுபேறு தானாக வந்தெய்தும் என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது. உலகில் வாழும் மக்களின் வாழ்க்கையை அகம் என்றும், புறம் என்றும் பாகுபடுத்தி அதை இயற்கையுடன் இயைபுபடுத்தியது பண்டைய தமிழரின் சிறந்ததொரு பண்பாடாகும். தமிழில் பொருள் இலக்கணம் ஒன்று தோன்றுவதற்கு முன்பே மக்கள் அதில் வகுத்த வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர் என்பதில் ஐயமில்லை.[7] அவ்வாழ்க்கையை விளக்கிக் காட்டுமளவுக்குத் தமிழரிடையே இலக்கிய வளம் நிரம்பி இருக்க வேண்டும். தமிழரின் வாழ்வு, தமிழர் பேசிய மொழி, தமிழர் வாழ்ந்த நிலம் ஆகிய இம்மூன்றுக்கும் இயல்பான நெருங்கிய தொடர்பு ஒன்று உண்டு என்ற உண்மை தமிழரின் நாகரீகத்தின் அடிப்படைத் தத்துவமாக அமைந்துள்ளது. தமிழ் நிலத்தின் உயிர்நாடி தமிழ்மக்கள், தமிழ் மக்களின் உயிர்நாடி தமிழ் மொழியாகும். ஆகவே, அகப்புற வாழ்வே பண்டையத் தமிழரின் பெருவாழ்வாகும்.

### மேற்கோள்கள்

1. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002. ப.123
2. மேலது., ப.125
3. ப.சங்கரலிங்கம், இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998. ப.17
4. மேலது., ப.17
5. மேலது., ப.19

6. மேலது., ப.19
7. கே.கே.பிள்ளை, மேலது., ப.125

**துணைநூற்பட்டியல்**


1. இராசமாணிக்கனார், மா. தமிழக வரலாறும், தமிழர் பண்பாடும் பன்னாட்டு தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை, 2019
2. இராமகிருட்டிணன், ஆ. தமிழக வரலாறும், தமிழர் பண்பாடும், சர்வோதயா இலக்கியப் பண்ணை.
3. சங்கரலிங்கம், ப. இலக்கிய வரலாறு மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.
4. சுவாமிநாதன், அ. தமிழக வரலாறும் பண்பாடும் தீபா பதிப்பகம், சென்னை, 1999.
5. செல்லம், வே.தி. தமிழக வரலாறும் பண்பாடும் மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2021.
6. பிள்ளை, கே.கே. தமிழக வரலாறு – மக்களும், பண்பாடும் உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.